


25. 01. 2026

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் 77ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களிடையே இன்று இரவு 7 மணிக்கு உரையாற்றுகிறார்.

2. வளர்ச்சி அடைந்த இந்தியா இலக்கை விரைவுபடுத்த இளம் தலைமுறையினர் திறம்பட செயல்படுவதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் வலியுறுத்தியுள்ளார்.

3. தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. தமிழகத்தில் சிறப்பாக செயலாற்றிய 44 காவல்துறையினருக்கு குடியரசு தின காவல் பதக்கங்களை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

5. இந்திய நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான 3ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி குவஹாட்டியில் இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

*************

குடியரசு தலைவர் உரை

நாட்டின் 77ஆவது குடியரசு தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களிடையே இன்று இரவு 7 மணிக்கு உரையாற்றுகிறார்.

குடியரசு தலைவரின் உரை ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷன் அலைவரிசைகளில் நேரடியாக ஒலி பரப்பாகும்.

தொடர்ந்து இரவு ஒன்பதரை மணிக்கு இதன் மொழியாக்கம் இடம்பெறும்.

இதனிடையே தலைநகர் டெல்லியில் குடியரசு தின கொண்டாட்டங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

புதுதில்லி கடமை பாதையில் முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் இடம்பெறுகின்றன.

நாட்டின் பல்வேறு மாநிலங்களின் கலாச்சார பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் 2 ஆயிரத்து 500 கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

இந்தாண்டு குடியரசு தின சிறப்பு விருந்தினர்களாக ஐரோப்பிய ஆணையத்தலைவர் டாக்டர் உர்சுலா வாண்டெர் லேயென், அதிபர் அண்டோனியோ லூயிஸ் சான்டோஸ் டா கோஸ்டா பங்கேற்கின்றனர்.

காவல், தீயணைப்பு, ஊர்காவல் உள்நாட்டு பாதுகாப்பில் செயலாற்றிய 982 பேருக்கு வீர தீர செயலுக்கான குடியரசு தலைவரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

குடியரசு தினத்தை முன்னிட்டு நாடுமுழுவதும் ரயில், பேருந்து நிலையங்கள், சுற்றுலா தலங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன.

*************

மன்-கி-பாத்

வளர்ச்சி அடைந்த இந்தியா இலக்கை விரைவுபடுத்த இளம் தலைமுறையினர் திறம்பட செயல்படுவதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் மனதின் குரல் நிகழ்ச்சியில் 130ஆவது முறையாக இன்று உரையாற்றிய பிரதமர், தொழில்துறை, ஸ்டார்ட அப், உள்ளிட்ட பிரிவுகளில் உயர் தரத்தை உறுதி செய்வதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

புத்தொழில்கள் தொடங்கும்பொது தரத்திற்கு முக்கியத்துவம் அளிக்குமாறு இளம் தொழில்முனைவோர்களை அறிவுறுத்திய பிரதமர் நாட்டின் பொருளாதாரம் விரைவான முன்னேற்றத்தை கண்டுவரும் இச்சூழலில் உள்நாட்டு உற்பத்தி பொருட்களின் தரத்தை மேம்படுத்த உறுதியுடன் செயலாற்ற வேண்டும் என்றார்.

கடந்த 10 ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு, விண்வெளி, அணுசக்தி, போக்குவரத்து, பசுமை ஹைட்ரஜன்,

உயிரி தொழில்நுட்பம், குறைகடத்தி உள்ளிட்ட துறைகளில் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர் ஜனநாயகத்தை வலுப்படுத்த வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை முதல்முறை வாக்காளர்கள் அனைவரிடமும் கொண்டு செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாட்டின் அரசியலமைப்பை உருவாக்கிய தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான வாய்ப்பாக நாளைய குடியரசு தின கொண்டாட்டங்கள் அமைவதாக பிரதமர் குறிப்பிட்டார்

நீர்மேலாண்மை, நீர் நிலைகளை பாதுகாத்து மேம்படுத்துவதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய பிரதமர், உத்திரபிரதேசம், ஆந்திரபிரதேசம், உள்ளிட்ட மாநிலங்களில் உள்ளூர் மக்களின் பங்களிப்புடன் நீர் நிலைகளில் குப்பை மற்றும் கழிவுநீர் மேலாண்மை திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படுவதாக பெருமிதம் தெரிவித்தார்.

இளம் தலைமுறையினரிடையே பக்தி, பாரம்பரிய கலாச்சார ஆர்வம் அதிகரித்து வருவதை குறிப்பிட்ட பிரதமர், பஜன் போன்ற நிகழ்ச்சிகள் பக்தி மார்கத்தில் அனைவரையும் ஒருங்கிணைப்பது பெருமை அளிப்பதாக கூறினார்.

தமிழ் மொழியின் பெருமை பற்றி குறிப்பிட்ட பிரதமர், மலேசியாவில் 500க்கும் மேற்பட்ட பள்ளிகளில் தமிழ் மொழி கற்பிக்கபடுவதாக கூறினார்.

போதை பொருட்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அவற்றை முற்றிலும் தடுக்க பொதுமக்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்றார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தின் கீழ் இதுவரை 200 கோடிக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

சிறுதானியங்களின் அவசியம் குறித்து எடுத்துரைத்த பிரதமர், தமிழகத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டம் பெரியபாளையத்தில் 800 பெண் விவசாயிகள் சிறு தானிய உற்பத்தியில் ஈடுபட்டு அவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருட்களை சந்தை படுத்தி வருவதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

பிரதமர் வாய்ஸ்

செயற்கை நுண்ணறிவு துறையில் இந்தியாவின் வளர்ச்சி மற்றும் சாதனைகளை அடுத்த மாதம் புதுதில்லியில் நடைபெறும் "இந்திய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாடு" உலக அளவில் பறை சாற்றும் என பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

*************

தேசிய வாக்காளர் தினம்

ஜனநாயகத்தின் பிறப்பிடமாக இந்தியா விளங்குவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பெருமிதம் தெரிவித்துள்ளார்.

16ஆவது தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி புதுதில்லியில் சிறப்பாக செயல்பட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு விருதுகளை வழங்கி பேசிய அவர், நாட்டில் தற்போது 95 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இன்றைய வாக்கு நாளைய தேசத்தை வடிவமைப்பதாக குறிப்பிட்ட குடியரசு தலைவர், முதல்முறை வாக்காளர்கள் குறிப்பாக பெண் வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை முறையாக பயன்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

" எனது இந்தியா எனது வாக்கு" என்ற இந்தாண்டின் கருப்பொருளுடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தலைமை தேர்தல் ஆணையர் திரு.ஜியானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் டாக்டர் சுக்பீர் சிங், டாக்டர் விவேக ஜோஷி மத்திய சட்ட அமைச்சர் திரு.அர்ஜூன் ராம் மெஹ்வால், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் வாக்காளர் விழிப்புணர்விற்கான சிறந்த ஊடக விருது ஆகாஷவாணி செய்திப்பிரிவிற்கு வழங்கப்பட்டது.

இந்நாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்ட செய்தியில் வாக்காளராக பதிவு செய்த தருணத்தை நாட்டின் முதல்முறை இளம் வாக்காளர்கள்

ஒன்றிணைந்து கொண்டாட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தேசிய வாக்காளர் தினத்தை ஒட்டி மத்திய இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா நாகை, காரைக்கால் கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை காரைக்காலில் இன்று தொடங்கிவைத்தார்.

தமிழகம் முழுவதும் வாக்களிப்பதன் அவசியம் குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

நெல்லை மாவட்டத்தில் தகுதியுடைய அனைவரும் வாக்காளராக பதிவு செய்து கொள்வதன் அவசியத்தை ஆட்சித்தலைவர் திரு.சுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

வாய்ஸ்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற மாதிரி வாக்குப்பதிவு தங்களுக்கு பயனளித்ததாக இளம் வாக்காளர்கள் தெரிவிக்கையில்

வாய்ஸ்

*************

காவல் விருது

தமிழகத்தில் சிறப்பாக செயலாற்றிய 44 காவல்துறையினருக்கு குடியரசு தின காவல் பதக்கங்களை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

நுண்ணறிவு மற்றும் செயலாக்க பிரிவில் சிறப்பாக பணியாற்றிய 43 காவல்துறை அதிகாரிகள்,

ஒரு தனிப்பிரிவு உதவியாளர் என 44 பேருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

*************

மொழிப்போர் தியாகிகள் தினம்

தமிழ்நாட்டில் மொழிப்போர் தியாகிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை எழும்பூரில் மொழிப்போர் தியாகிகள் தாளமுத்து, நடராஜன் சிலைகளை திறந்துவைத்து வீரவணக்கம் செலுத்தினார்.

மொழிப்போர் களத்தில் இன்னுயிர் ஈந்தவர்களின் நினைவை போற்றும் வகையில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வீரவணக்கம் செலுத்தப்படுகிறது.

*************

எ.வ.வேலு

மதுரை மாவட்டத்தில் 460 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

கோரிப்பாளையம் மேம்பால கட்டுமான பணிகளை இன்று ஆய்வு செய்த அவர், 190 கோடி ரூபாய் மதிப்பிலான இப்பாலம் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

*************

சாலை பாதுகாப்பு மாதம்

37ஆவது தேசிய சாலை பாதுகாப்பு மாதத்தை ஒட்டி ராணிப்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இப்பேரணியில் தலைகவசம் அணிவது, பாதுகாப்பாக வாகனங்களை இயக்குவது, விதிகளை பின்பற்றுவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

*************

இருவரி

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா பேட்டையில் முதலமைச்சர் இளையோர் விளையாட்டு திருவிழாவை மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு.காந்தி இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.

திருச்சி பெரம்பலூர் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் மாற்றுத்திறனாளிகள் இலவச பேருந்து பயணம் மேற்கொள்ள வரும் மார்ச் 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

*************

கோ கோ போட்டிகள்

42ஆவது மாநில அளவிலான இளையோர் கோ கோ போட்டிகள் சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் இன்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் திருச்சி பெரம்பலூர் திருவாரூர் புதுக்கோட்டை உள்ளிட்ட 26

மாவட்டங்களை சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

கோவை - சிவகங்கை அணிகளுக்கிடையே இன்று நடைபெற்ற முதல் அரையிறுதியில் சிவகங்கை அணி 9 புள்ளிகள் பெற்று இறுதி போட்டிக்கு முன்னேறியது.

*************

கிரிக்கெட்

இந்திய நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான 3ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி குஹாட்டியில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது